1970 மார்ச் 25]

ஏற்பாட்டால்தான் இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட முடியும என்பதை அரசு எற்றுக்கொள்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது ஒரு பெரிய அரசியல் போராட்டத் தத்துவம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினு 546 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Workers of Standard Motor Products.

*547 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the auto workers employed in Standard Motor Products India, Madras went on strike during the months October and November 1969; and

(b) if so, for what reasons?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: (அ) ஆம். சென்னை இந்திய ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்கள் 12—9—1969 முதல் வேலைநிறுத்தம் செய்தனர்.

(இ) இந்திய ஸ்டாண்டர்டு மோராட்டார் பிராடக்ட்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர் சங்கம் தயாரித்த 1968-ஆம் ஆண்டிற்குரிய பூரிப்பு ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைப் பட்டியலை ஆதரித்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

THIRU K. VINAYAKAM: Were their grievances met by the management, what is the position now obtaining in the factory, were all the people who struck work got back employment or were any striking worktrs victimised?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: மேற்கண்ட தொழில் தகராறு பற்றி தொழிலாளர் நலத்துறை ஆராய்ந்ததற்குப் பின்னல் அதை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பினேம். அதற்குப் பின்னலே வேலைநிறுத்தம் தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருந்தது. தொழிலாளர் நல அமைச்சராகிய நானும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் மற்றும் தொழிலதிபர்களையும் வரவழைத்துப் பேசிக் கடைசியாக தீர்வு கண்டு அவர்கள் மீண்டும் வேலைக்குப் போனர்கள். தற்போது பிரச்னை நல்லமுறையிலே சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, வண்டலூர் மோட்டார் கம்பெனித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தவுடனே அரசு தலையிட்டு வேலை செய்யுங்கள். நடுவர் தீர்ப்புக்கு விடலாம், வேலைக்குப் போகவேண்டும் என்று கூறியது. ஆனல் மறுபடியும் தொடர்ந்து வேலைக்குப் போக வேண்டாமென்று ஒரு அரசியல் கட்சி தூண்டியதால்தான் அவர்கள் வேலைக்குப் போகாமல் இருந்தார்கள் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா? அரசாங்கம் தலையிட்டதற்குப் பிறகு வேலைநிறுத்தம் முடிந்து தொழிலாளர்கள் வேலையிழப்பு நாட்கள் இருக்கக்கூடாது, வேலைக்குச் செல்ல

[1970 மார்ச் 25

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, 12ஆம் தேதி அவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். 19ஆம் தேதிக்குள் அரசாங்கம் தலையிட்டு நடுவர் தீர்ப்பிற்கு விடலாம், வேலையிழப்பு நாட்கள் இருக்கக் கூடாது, வேலைக்குச் செல்ல வேண்டும் என்று முயற்சிகள் எடுத்தோம். அதற்குப் பிறகும் தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் இருந்தார்கள். அரசாங்கம் தலையிட்டு அவர்களைக் கூப்பிட்டுக் கலந்துபேசி வேலைக்குப் போக வேண்டுமென்று சொன்னோம். அரசாங்கம் முயற்சி எடுத்ததால் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினார்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளதை தமிழகத்து அனைத்துக் கட்சிகளும் அவர்களுடைய கோரிக்கை நியாயம் என்று ஆதரவு கொடுக்கக் கூடிய காலகட்டத்திலே டைரக்டர் வெளிநாட்டிலிருந்து வருகின்ற வரையில் வேலை நிறுத்தம் என்று செய்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கை போனஸ் 19 சத வீதம் கொடுக்கவேண்டும் என்பது. அது எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அவர் வெளிநாட்டுக்குப் போயிருந்தார் என்று சொல்வது தவறு; உடல்நலம் சரியில்லாத தால் சிகிச்சைக்காகப் போயிருக்கிறார். அவர்கள் முதலமைச்சர் அவர்களையும் என்னையும் தனித்தனியாக சந்தித்துப் பேசி ஏற்றுக் கொண்டார்கள். தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஏறக்குறைய அந்தப் பிரச்னை முடிகிற சூழ்நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : May I know which is the political party that was instigating this trouble in the factory?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : கேள்வி கேட்கிற உறுப்பினர் அவர்களுக்கே அது புரியும் என்ற காரணத்தினாலே நான் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

சில ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் மறுதினம் எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, திரு டி. மார்டின், திரு. ஏ. அ. சப்பாராஜா ஆகியோர் தனித்தனியே ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.